**1. சாமுவேலின் தகப்பன் எல்கானா எக்கோத்திரத்தைச் சேர்ந்தவன்?**

1சாமுவேல் 1:1ல் சாமுவேலின் தகப்பன் எல்கானா “எப்பிராயீமியன்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இவன் “எப்பிராயீம்” கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்று தெரிகின்றது. ஆனால், 1நாளாகமம் 6:16-30ல் உள்ள வம்சவரலாற்று அட்டவணையில் இவன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருக்கின்றான். இம்முரண்பாட்டுக்கான காரணம் யாது? **(ஜோனத்தன் தயா, லண்டன்)**

1நாளாகமத்திலுள்ள வம்ச வரலாற்று அட்டவணையின்படி, எல்கானா லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவனாகவே இருக்கின்றான். இல்லையென்றால், இவனுடைய மகன் சாமுவேலை ஆலயத்தில் பணிபுரிவதற்காக ஆசாரியனாகிய ஏலி அனுமதித்திருக்க மாட்டான் (1சாமு.3:1). மேலும், ஆசாரியர்கள் மட்டுமே அணியக் கூடிய ஏபோத்தை அணிந்து சாமுவேல் கர்த்தரைச் சேவிக்கிறவனாகவும் (1சாமு.2:18), ஆசாரியப் பணியையும் செய்கிறவனாகவும் (1சாமு.7:17, 16:2-5) இருந்தது, இவனுடைய தகப்பன் எல்கானா லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் அக்காலத்தில் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்களினால் மட்டுமே ஆசாரியர்களாகப் பணிபுரிய முடியும்.

இஸ்ரவேல் மக்களுக்குத் தேவனால் வாக்களிக்கப்பட்ட கானான் தேசம், அவர்களுடைய கோத்திரங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டபோது லேவி கோத்திரத்திற்குத் தனியான ஒரு பிரதேசம் கொடுக்கப்படவில்லை. இதனால், ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்களுடைய பிரதேசத்தில் சில பட்டணங்களை லேவியர்களுக்கு கொடுக்கும்படி தேவன் கட்டளையிட்டார். இதனால் லேவி கோத்திரத்தினர் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் குடியிருக்காமல், தங்களுக்கு கொடுக்கப்பட்ட பட்டணங்களில் வாழ்ந்து வந்தனர் (யோசு.22:1-42, எண்.35:1-8). யோசுவா 24:33ன்படி, எப்பிராயீம் மலைத்தேசம் லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்களில் ஒன்று என்பதை யோசுவா 24:33 அறியத்தருகின்றது. சாமுவேலின் தகப்பன் குடும்பத்தினர் இம்மலைப்பிரதேசத்தில் இருந்த “ராமதாயீம்” என்னும் ஊரில் வாழ்ந்து வந்தனர் (யோசு.24:33) இதனாலேயே 1சாமுவேல் 1:1ல் எல்கானா “எப்பிராயீமியன்” என்று குறிப்பிடப்பட்டுள்ளான்.

1நாளாகமம் 6:16-30ன்படி, லேவி கோத்திரத்தைச் சேர்ந்த எல்கானா வம்சத்தைப் பொறுத்தவரை லேவியனாகவும், 1சாமுவேல் 1:1ன்படி. குடியிருந்த பிரதேசத்தைப் பொறுத்தவரை எப்பிராயீமியனாகவும் இருந்தான். எனவே, இவ்விரு வசனங்களுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. எப்பிராயீமியருடைய பிரதேசத்தில் எல்கானா வாழ்ந்த “ராமதாயீம்” என்னும் பட்டணம், எருசலேம் நகரத்திற்கு 15 மைல்கள் வடக்கே இருந்தது. 1சாமுவேல் 1:19ல் இப்பட்டணமே “ராமா” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அக்கால இஸ்ரவேலில் ராமா என்னும் பெயரில் பல பட்டணங்கள் இருந்ததினால், எல்கானா எப்பட்டணத்தைச் சேர்ந்தவன் என்பதைக் குறிப்பிட்டுக் காண்பிப்பதற்காக 1சாமுவேல் 1:1ல் ராமா என்பது ராமதாயீம் என்று விளக்கப்பட்டுள்ளது.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006.